## 4. உரிமைப் பிரச்சினை.

சென்னை தொலைக்காட்சி நிலையத்தார் மீது—தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது பற்றி அவையில் பேசியதை ஒளிப்பரப்பியபோது உறுப்பினருடைய பெயர் குறிப்பிடப்பெறாதது குறித்து.

திரு வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரால் கடந்த 22 ஆம் தேதி சென்னை தொலைக்காட்சித் துறை மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். அதுகுறித்து இதுவரை எந்தவிதமான பதிலும் இல்லாத காரணத்தினால் உங்களுடைய அனுமதியோடு இந்த குறிப்பை சொல்ல விரும்பு கிறேன். 20 ஆம் தேதி இதே பேரவையில் தென் மாவட்டங் களில் ஏற்பட்ட மழையின் காரணமாக பலத்த சேதத்தை அரசின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத் தோடு நான் முயன்று, நான் அனுமதிக்கப்பட்டு, நான் தான் முதன் முதலாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தர வேண்டும் என்றும், வெள்ளத்தால் மக்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கவனத்தைப் பேரவைக்கு கொண்டு வந்தேன். ஆனால், அந்த சென்னை தொலைக்காட்சியில் 20 ஆம் தேதி மாலையிலே 7-30 மணிக்கும் 8-40 மணிக்கும் சொன்ன செய்தியில் யார் அந்த பிரச்சினையை அரசினுடைய கவனத்திற் திற்கு கொண்டு வந்தார்களோ, கொண்டுவந்த என்னுடைய பெயரை நீக்கிவிட்டு, என்னுடைய பெயரை புறக்கணித்துவிட்டு செய்தியை வெளியிட்டு இருக்கின்றார்கள். மழை விட்டும் தூவானம் விடவில்லை என்ற போக்கு சென்னை தொலைக் காட்சியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது இந்த சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகளை முழுமையாக ஒன்று இருட்டடிப்பு செய்யவேண்டும். ஆனால் தனிப்பட்ட ஒரு உறுப்பினருடைய உரிமையை மீறத்தக்க இந்த பிரச்சினையை உரிமை குழுவிற்கு விட வேண்டும் என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொலைக் காட்சித் துறையினர் தங்கள் பெயர் சொல்லப்படாமல் விடு பட்டது குறித்து வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இருந் தாலும் எதிர்காலத்தில் இதுபோன்று பெயர்கள் விடுபடாமல் பார்த்துக்கொள்வதாகவும் உறுதியும் அளித்திருக்கிறார்கள். எனவே இந்த பிரச்சினையை இத்துடன் நிறுத்திவிடலாம்.